பர்வீன்-நடராஜன் காதல் கதை

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 MAY
மலர்: 10 இதழ் : 8 மே 2017 விலை: ரூ. 5



## அமைதியை நோக்கிய பயணம்...

# படைத்தவன் கூறும் பிரபஞ்ச இரகசியங்கள்





**மைக்ரோஸ்கோப்பில் 22ஆம் நாள் கருவின் தலைப்பகுதி**

**மைக்ரோஸ்கோப்பில் அட்டைப்பூச்சியின் பின் உறிஞ்சு வாய்**

## மனித கருவும் அட்டைப் பூச்சியும்

● பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப் பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம் பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (திருக்குர்ஆன் 23:13,14)


மேற்படி இறைவசனத்தில் 'அலக்' என்ற வார்த்தைக்கு இரத்தக்கட்டி, தொங்கும் பொருள், அட்டைப்பூச்சி என மூன்று பொருட்கள் உண்டு. கருவின் ஆரம்ப நிலை இவை ஒவ்வொன்றோடும் பொருந்திப் போவது படைத்தவன் வார்த்தைகளே குர்ஆன் என்பதைப் பறைசாற்றுகின்றன.



*24-25* நாள் கரு



அட்டைப்பூச்சி





அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 MAY**

**மலர்: 10 இதழ் : 8 மே 2017 விலை: ரூ. 5**


## பொருளடக்கம்


*எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? -2*

*நல்லதையே பேசுவோம் -4*

*இயற்கையும் இஸ்லாமும் -5*

*திருந்தி வாழ வேண்டும் -6*

*அமைதியின்மைக்கான காரணங்களும் தீர்வுகளும் -8*

*தனிமனித சீர்திருத்தமும் மனிதகுல ஒற்றுமையும -12*

*பர்வீன் - நடராஜன் காதல் கதை -14*

*அமைதிகரமான இல்லறம் காண முதல்படி -20*

*பயங்கரவாதப் பட்டம்! -22*


## விருந்தினர் உரிமை

நபி(ஸல்) அவர்கள் (பின்வருமாறு) கூறியதை என் காதுகள் செவியேற்றன. என் உள்ளம் அதை மனனமிட்டது. “விருந்துபசாரம் மூன்று நாள்களாகும். (அவற்றில்) அவரின் கொடையும் அடங்கும்’ அப்போது, ‘அவரின் கொடை என்ன?’ என்று கேட்கப்பட்டது. நபி(ஸல்) அவர்கள், ‘(அவரின் கொடை) ஒரு பகல் ஓர் இரவு (உபசரிப்பு) ஆகும்’ என்று கூறிவிட்டு, ‘இறைவனையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும். மேலும், இறைவனையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப் பேசட்டும் அல்லது வாய்மூடி இருக்கட்டும்’ என்றார்கள்.

அறிவிப்பவர்: அபூஷுரைஹ் அல்அதவீ அல்குஸாஈ(ரலி), (புகாரி)


Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,

AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

<u>அமைதியை நோக்கிய பயணம்</u>

# எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி?

இன்றைய அவசர உலகில் அமைதியை இழந்து தவிக்கும் மனிதன் அந்த அமைதியைப் பெற வேண்டி எல்லாக் குறுக்கு வழிகளையும் தேடி அலைவதை நாம் இன்று கண்டு வருகிறோம். மனிதனின் இந்த கண்மூடித்தனமான அலைச்சலை முதலீடாகக் கொண்டு கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்ட புறப்பட்ட சிலர் உண்மைக்கு புறம்பான போதனைகளையும் மனித இயற்கைக்கு மாறான தத்துவங்களையும் போதித்து மக்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றனர். அவற்றை அப்படியே வேதவாக்குகளாக நம்பி மோசம் போகும் மக்களில் பலர் இருந்த அமைதியையும் இழப்பதோடு தங்கள் பொருளாதாரத்தையும் உடமைகளையும் இழக்கின்றனர். பெண்களில் சிலர் கற்பை இழக்கும் செய்திகளையும் நாம் அறிவோம்.



உண்மையில் ஆன்மிகம் என்பது ஆன்மாவுக்கு இதமளிப்பது சாந்தியளிப்பது. இறைவனோடு நேரடியாக தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் மனக்கவலைகளை மறக்கடிக்கச் செய்வது. ஆனால் இவ்வாறு ஆன்மீகத்தின் மூலம் மக்கள் ஏமாறுவதை எவ்வாறு தடுப்பது?

## பகுத்தறிவு கூறும் அடிப்படை உண்மைகள்

இந்நிலை மாற வேண்டுமானால் மக்கள் சில அடிப்படை உண்மைகளை மனமுரண்டு பிடிக்காமல் ஒப்பு கொண்டேயாக வேண்டும்.

- முதலாவதாக நம்மையும் நாம் வாழும் உலகத்தையும் படைத்து பரிபாலித்து வருபவன் ஒருவன் உள்ளான். அவன் மட்டுமே நம் வணக்கத்திற்கு உரிய இறைவன். அவன் அல்லாத அனைத்துமே படைப்பினங்கள். அவற்றுக்கு நம் வணக்கத்தை ஏற்கும் சக்தியோ பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கும் ஆற்றலோ கிடையாது. எவ்வளவுதான் புனிதமானவையாக இருந்தாலும் பிரம்மாண்டமானதாகத் தெரிந்தாலும் படைப்பினங்கள் ஒருபோதும் படைப்பாளன் ஆகமுடியாது. எனவே அவை எதுவும் வணக்கத்திற்கு உரியவை அல்ல.
- இரண்டாவதாக, நாம் அவனால் படைக்கப் பட்டவர்கள். அவனது அடிமைகள். அவன் போட்ட பிச்சையில் வாழுபவர்கள். நமது பிறப்பும் வாழ்வும் இறப்பும் அவனது ஆதிபத்தியத்துக்கு உட்பட்டவை. நமக்கு வழங்கப்பட்ட உடமைகளும் செல்வங்களும் கூடினாலும் குறைந்தாலும் எந்நிலையிலும் இந்த உண்மையை மறந்து விடக்கூடாது.
- மூன்றாவதாக, நாம் இன்று வாழும் வாழ்க்கையானது நிலையற்றது. குறுகியது. மரணம் வந்து விட்டால் நம்மோடு இன்று ஒட்டிக் கொண்டிருக்கும் உடலையும் உடமைகளையும் உறவுகளையும் விட்டுச் சென்றேயாக வேண்டும். இவை நமக்கு தற்காலிகமாக தரப்படும் அருட்கொடைகள். நம் குறுகிய வாழ்நாளில் இவற்றை நாம் எவ்வாறு கையாள்கிறோம் என்று பரீட்சிப்பதற்காக இறைவன் இவற்றைத் தந்துள்ளான். அதாவது இந்த வாழ்க்கை என்பது ஒரு பரீட்சையாகவும் இந்த தற்காலிக உலகம் அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைக்கப்பட்டுள்ளது.
- அடுத்ததாக, இப்பரீட்சையில் வெற்றி அடைய வேண்டுமானால் இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி கூர்ந்து அவனது

எவல்விலக்கல்களை ஏற்று வாழவேண்டும். அவனுக்குப் பொருத்தமான காரியங்களைச் செய்ய வேண்டும். அவையே புண்ணியம் என்பது. அத்துடன் விலக்கிய காரியங்களில் இருந்து விலகி இருக்கவேண்டும். அவையே பாவம் எனப்படும். அவ்வாறு அவன் தடுத்த காரியங்களைச் செய்தால் அது அவனுக்கு செய்யும் நன்றி கேடாகும். அதனால் அவனது கோபத்துக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடும்.

- நமக்கு எவ்வாறு மரணம் என்பது காத்திருக்கிறதோ அது போலவே இந்த பரீட்சைக்கூடத்திற்கும் - அதாவது இந்த உலகம் என்ற தற்காலிக அமைப்புக்கும் - முடிவு என்பது உள்ளது. இறைவனிடம் இருந்து கட்டளை வரும்போது இவ்வுலகம் முற்றாக அழிக்கப்படும். பிறகு மீண்டும் அடுத்த இறைகட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் மீண்டும் விசாரணைக்காக எழுப்பப்படுவார்கள்.

- அந்த விசாரணை நாளன்று இந்த பூமியின்மேல் ஆரம்பம் முதல் வாழ்ந்து மறைந்த அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு அவர்களுக்கிடையே நியாயத்தீர்ப்பு நடைபெறும். அவர்களின் புண்ணியம் மற்றும் பாவங்கள் கணக்கிடப்படும். அன்று யாருடைய புண்ணியங்கள் அதிகமோ அவர்களுக்கு சொர்க்கம் விதிக்கப்படும். யாருடைய பாவங்கள் அதிகமோ அவர்களுக்கு நரகம் விதிக்கப்படும். இவையே மனிதர்களின் இறுதியான நிலையான இருப்பிடங்களாகும்.

ஆக, இவ்வுண்மைகளை வாழ்வின் அடிப்படைகளாக ஏற்று வாழ மனிதன் தயாராகி விட்டால் மீண்டும் மனித வாழ்வு ஒழுக்கமும் வளமும் நிறைந்ததாக மாறும். அது குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பிரதிபலிக்கும்.

**எல்லாக் காலங்களுக்கும் இறைச்செய்தி இதுவே**

இந்த நல்லொழுக்கத்திற்கு அடிகோலும் ஆன்மீகத்தை போதிக்கத்தான் எல்லாக் காலங்களிலும் இறைவன் தன் தூதர்களையும் வேதங்களையும் அனுப்பினான். அந்த வரிசையில் இறுதியாக வந்தவரே முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர் மூலமாக அனுப்பப்பட்ட இறைவேதமே திருக்குர்ஆன். அவ்வாறு இறைவன் தன் இறைத்தூதர்கள் மூலமாக கற்றுத்தரும் வாழ்க்கை நெறியே இஸ்லாம் என்று இன்று அரபுமொழியில் அறியப்படுகிறது. அது மனித வாழ்வின் அனைத்துத்துறைகளையும் தழுவியது.

அவ்வாறு இறைவன் தரும் மார்க்கத்தை விட்டுவிட்டு ஆன்மீக வேடமிட்டு வரும் போலியான இடைத்தரகர்களையும் மனித கற்பனைகளையும் யார் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு வாழ்வில் அமைதியின்மையும் ஏமாற்றமும் மட்டுமல்ல, அத்துடன் இவ்வாழ்க்கைப் பரீட்சையில் தோல்வியுமே மிஞ்சும்.

- **ஆகவே நீர் உம்முகத்தை தூய மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எதில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய இயற்கை மார்க்கமாகும். அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள். (திருக்குர்ஆன் 30:30)**

(இவ்வுலகைப் படைத்து பரிபாலிக்கும் இறைவனுக்கு அரபு மொழியில் அல்லாஹ் என்று வழங்கப்படுகிறது. வணங்குவதற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்பது இவ்வார்த்தையின் பொருள்)

ஆம், இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் எதை மார்க்கமாகக் கற்பிக்கிறானோ அதுவே அவன் ஒப்புக்கொள்ளும் மார்க்கமும் ஆகும். அதாவது அவனது கட்டளைகளுக்குக் கீழ்படிந்து வாழும் வாழ்க்கை

நெறிதான் நேர்மார்க்கமாகும். அவன் படைத்த பூமியில் வாழ்ந்து கொண்டு அவனுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்வது முறையா? அவன் தன் தூதர்கள் மூலமாக காலாகாலமாக அனுப்பி வரும் மார்க்கத்தை புறக்கணித்துவிட்டு முன்னோர்களின் வழக்கங்களையும் இன்னபிற மார்க்கங்களையும் பின்பற்றினால் என்ன நடக்கும்? இதோ, அவனே தன் திருமறையில் தெளிவு படுத்துகிறான்:

● **"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்..." (அல்குர்ஆன் 3:19)**

● **"இஸ்லாமைத் தவிர்த்து (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்பட மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்" (அல்குர்ஆன் 3:85)**

(இஸ்லாம் என்றால் இறைவன் தன் வேதம் மற்றும் தூதர்கள் மூலமாக கற்பிக்கும் ஏவல்விலக்கல்களை ஏற்று அதன்படி வாழுதல் என்பதை நினைவு கொள்க)

# நல்லதையே பேசுவோம்

நமது சொல்லும் செயலும் பலவிதங்களில் பதிவாகின்றன என்பதை என்ற உண்மையை குர்ஆனும் நபிமொழிகளும் கூறுகின்றன. அது உண்மையே என்பதை அறிவியல் வாயிலாகவும் அறிகிறோம். நமது மூளையும் கண்களும் காதுகளும் தோல்களும் பதிவு இயந்திரங்களாக செயல்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள அதிக ஆராய்ச்சிகள் ஒன்றும் தேவையில்லை. எனவே தீயவை தவிர்த்து நல்லவையே பேசுவோம்.



● **நம்பிக்கை கொண்டோரே! இறைவனுக்கு அஞ்சுங்கள்! நேர்மையான சொல்லையே கூறுங்கள்! (திருக்குர்ஆன் 33:70)**

● **யாரேனும் கண்ணியத்தை நாடினால் கண்ணியம் யாவும் இறைவனுக்கே உரியது. தூய சொற்கள் அவனிடமே மேலேறிச் செல்லும். நல்லறம் அதை உயர்த்தும். தீய காரியங்களில் சூழ்ச்சி செய்வோருக்குக் கடுமையான வேதனை உண்டு. அவர்களின் சூழ்ச்சி தான் அழியும். (திருக்குர்ஆன் (35:10)**

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டைத் தர்மம் செய்தேனும் நரகத்திலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதுவும் இல்லையானால் இனிய சொல்லைக் கொண்டாவது (காப்பாற்றிக் கொள்ளுங்கள்).

அறிவிப்பவர்: அதீ பின் ஹாத்திம் (ரலி), நூல்: புகாரி (6023)

● நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "இறைத்தூதரே! எந்த காரியத்தை நான் செய்தால் சொர்க்கத்திற்குச் செல்வேனோ அப்படிப்பட்ட ஒரு காரியத்தை எனக்கு கற்றுக் கொடுங்கள்" என்று கூறினேன்."சலாமைப் பரப்பு. நல்ல பேச்சைப் பேசு. உறவுகளை இணைத்து வாழ். மக்கள் உறங்கும் போது இரவில் நின்று வணங்கு. சாந்தியுடன் சொர்க்கத்தில் நுழைவாய்" என்று கூறினார்கள்.


அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: அஹ்மத் (9996)

(சலாம் என்றால் 'அஸ்ஸலாமு அலைக்கும்' - உங்கள் மீது இறைவனின் சாந்தி உண்டாகட்டும் என்ற வாழ்த்துரையைக் கூறுதல்)

# இயற்கையும் இஸ்லாமும்

இயற்கையில் நாம் காணும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மரம், செடி, கொடி, விலங்கினங்கள், பறவைகள், மீனகள் என அனைத்துமே இறைவன் விதித்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதை அறிவோம். அதேபோல நம் கண்களுக்குப் புலப்படுபவையும் புலப்படாதவையும் ஆன அண்டசராசரங்கள் முதல் அணுவின் கூறுகள் வரை அவ்வாறு கட்டுப்பட்டே நடக்கின்றன.

உதாரணமாக அணு, மின்னணு, நியுட்ரோன், புரோட்டோன் போன்றவையும் அறிவியல் தொடர்ந்து கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் அவற்றின் நுண்ணிய கூறுகளும் என அனைத்துமே இறைவன் அவற்றுக்கு விதித்த விதிகளுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றன. அதனால் அவற்றில் ஒழுங்கும் அமைதியும் காணப்படுகிறது. அந்த அடிபணிதல் அல்லது கட்டுப்படுதல் மூலம் பெறப்படும் ஒழுங்குக்கும் அமைதியுமே இஸ்லாம் என்று அரபுமொழியில் அறியப்படுகிறது.



இவ்வுலகில் மனிதனுக்கு கொடுக்கப்பட்டதைப் போல் அவற்றுக்கு விருப்ப உரிமை (freedom of choice) கொடுக்கப் படவில்லை. மனிதனுக்கு இவ்வுலக வாழ்வு ஒரு பரீட்சை போலவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைக்கப்பட்டுள்ள காரணத்தால் அவனுக்கு கீழ்படிவதற்கும் கீழ்படியாமல் இருப்பதற்கும் அவனுக்கு தீர்வு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. .ஆனாலும் மனிதனைப் பொறுத்தவரையில் அவன் பிறக்கும்போது இறைவனுக்குக் கீழ்படியும் நிலையில்தான் பிறக்கிறான். அவன் வளரவளர சிந்தனை விரியும் போதுதான் அதிலிருந்து மாறுபடுகிறான். தன் மார்க்கத்தைத் தேர்வு செய்கிறான். நபிகள் நாயகம் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.:



”ஒரு விலங்கு முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுப்பதைப் போன்றே எல்லாக் குழந்தைகளும் இயற்கை மார்க்கத்திலேயே பிறக்கின்றன. விலங்குகள் நாக்கு, மூக்கு வெட்டப்பட்ட நிலையில் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பெற்றோர்கள்தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டும் திருப்பி யூதர்களாகவோ, கிறிஸ்தவர் களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.” (நூல்: புகாரி எண் 4775)

அந்த கீழ்படியும் நிலைதான் இஸ்லாம். அதுதான் இயற்கை மார்க்கமும் ஆகும்.

## விதிகளுக்கு கட்டுப்படுவதால் ஒழுங்கு

ஒரு நிறுவனம் அல்லது தொழிற்சாலை அல்லது கல்லூரி சுமுகமாக இயங்க வேண்டுமானால் அதற்கான குறைகளற்ற சட்டதிட்டங்களும் இருக்கவேண்டும், அவற்றை அனைவராலும் பின்பற்றப்படவும் வேண்டும். அவ்வாறு இவ்வுலகைப் படைத்தவன் வழங்கும் சட்டதிட்டங்களைப் பின்பற்றி நடந்தால் இவ்வுலக வாழ்க்கை சுமுகமாக இருக்கும். அவ்வாறு பின்பற்றி வாழ்ந்ததற்காக இறைவன் புறத்திலிருந்து பரிசாக சொர்க்கம் என்ற நிரந்தர வாழ்விடம் மறுமையில் வழங்கப்படுகிறது.

அமைதியை நோக்கிய பயணம்

# திருந்தி வாழ வேண்டும்

சட்டம், ஒழுங்கு, நீதிமன்றம், காவல்துறை, சட்டமன்றம், பாராளுமன்றம், ஆன்மீக போதனைகள், வழிபாட்டுத்தலங்கள், போன்ற அனைத்தும் இருந்தும் தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் கொடூரங்களுக்கும் எந்தக் குறைவும் இல்லை. மாறாக இவைகள் மிக வேகமாக அதிகரித்தே வருகின்றன. எதைச்செய்தாலும் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வு மக்களில் பெரும்பாலானோரிடம் மேலோங்கி இருப்பதால் நம்மைச்சுற்றி என்னென்ன நடக்கிறது பாருங்கள்:

- தாம் பெற்ற பிள்ளைகளைக் சகஜமாக தாமாகவே கொன்றொழிக்கும் பெற்றோர்கள். பெருகிவரும் கருக்கொலை, சிசுக்கொலை, பெண்சிசுக்கொலைகள்.
- வாழ்நாட்களை தங்களுக்காகவே அர்பணித்த பெற்றோர்களை வளர்ந்து ஆளானதும் மதிக்காத பிள்ளைகள்... பெருகிவரும் முதியோர் இல்லங்கள், கருணைக் கொலை என்ற பெயரில் நடக்கும் முதியோர் கொலைகள்,
- போற்றி வளர்த்த பெற்றோரை தூக்கி எறிந்து காதலர்களைக் கைப்பிடித்து ஓடிப்போகும் பிள்ளைகள்.
- காதல் என்ற பெயரில் காமப்பசி தீர்த்துவிட்டு கர்ப்பம் தரித்தபின் கைவிட்டு ஓடும் காமுகர்கள்.
- திருமண ஒப்பந்தத்தை மீறி நடக்கும் கள்ளக்காதல் உறவுகள், கபட நாடகங்கள், கள்ளக்காதலனுக்காக அல்லது காதலிக்காக மணமுடித்த கணவனை அல்லது மனைவியை மற்றும் சொந்தக் குழந்தைகளைக் கொன்றொழிக்கும் கொடூரங்கள்.
- திருமணம் இல்லாமலே ஆணும் பெண்ணும் தகாத உறவு கொண்டு மனம்போன போக்கில் வாழுதல். அதில் பெற்றெடுக்கும் பிள்ளைகளை ஈவிரக்கமின்றி கொல்லுதல்.
- அந்நிய ஆண்களும் அன்னிய பெண்களும் தடைகளின்றி கலந்து படிக்கும், பணியாற்றும் ஏற்பாடுகளும் அங்கு நடைபெறும் தவறான பாலியல் உறவுகளும், வல்லுறவுகளும்! (நாளொன்றுக்கு 95 பெண்கள் கற்பழிப்பு - NCRB)
- மது, போதைப்பொருள் இவற்றின் கட்டுக்கடங்காத பெருக்கம். பள்ளி மாணவர்களும் வகுப்பறைக்கு குடித்துக்கொண்டு வரும் அவலம்.

என இவற்றின் நடுவே எந்தவித குற்ற உணர்வும் வெட்க உணர்வும் இன்றி சஞ்சரித்துக் கொண்டு வாழ்கிறது சமூகம்!

இந்த தீமைகளும் பாவங்களும் அநியாயங்களும் தட்டிக்கேட்கப் படாமலும் தடுக்கப் படாமலும் தொடருமானால் மனித வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவே இருக்கும். இவற்றின் முற்றிய நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம். மனிதன் வாழ்வதற்கே வெறுத்த நிலையை இன்று நாம் கண்டுவருகிறோம். தேசிய குற்றவியல் ஆவணக்காப்பகம் ஊளசுடீ அறிக்கைப் படி நாளொன்றுக்கு 371 பேர் இந்தியாவில் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

### அமைதி திரும்ப மனமாற்றம் தேவை

நாட்டுநலன் கருதி நாம் இதற்கான தீர்வுகளைக் கண்டறியவும் ஆவன செய்யவும் வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இத்தீமைகள் கட்டுகடங்காமல் பெருகுவதற்கு முக்கிய காரணங்களாக கீழ்கண்டவற்றை நாம் கூறலாம்:

அ) தன்னைத் தட்டிக் கேட்கவோ தண்டிக்கவோ யாரும இல்லை என்ற தைரியம்

ஆ) மனிதனுக்கும் சக மனிதனுக்கும் இடையே உள்ள உறவு உணரப்படாதது அல்லது அதுபற்றி கற்பிக்கப் படாதது.

உலகில் மீண்டும் அமைதி திரும்ப வேண்டுமானால் மனித மனங்களை சீர்திருத்த வேண்டும். முக்கியமான உண்மைகளை உணர்த்தியே ஆகவேண்டும். இதோ நம்மைப் படைத்தவன் எச்சரிக்கிறான்:

● **மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

அதாவது அனைத்து மனித குலமும் ஒரே குடும்பமே, நம் அனைவருக்கும் ஒரே இறைவனே என்று உலகளாவிய சகோதரத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதோடு அந்த இறைவனின் பரிபாலனத்திலும் கண்காணிப்பிலும் அனைவரும் உள்ளோம் என்பதை மனித மனங்களில் அடிப்படையாக விதைப்பதுதான் மேற்கூறிய தீமைகளை தடுப்பதற்கான முதல் படி. அப்போதுதான் மக்களை சீர்திருத்தி ஒழுக்கம் நிறைந்த ஓர் உலகை மறுபடியும் சமைக்க முடியும்.

தனிநபர் ஒழுக்க சீர்கேடுகள், குடும்பங்கள் சீரழிப்பு, சமூகத் தீமைகள் தொடங்கி வல்லரசு பயங்கரவாதக் கொடுமைகள் வரை அனைத்து தீமைகளையும் ஒழித்துக் கட்ட வேண்டுமானால் இஸ்லாம் பரிந்துரைக்கும் இது ஒன்று மட்டுமே வழியாக உள்ளது.

முறையான இறைநம்பிக்கையும் வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தையும் மறுமை வாழ்வையும் கற்பிப்பதன்வழி இக்கொள்கையை ஏற்பவர்களை சீர்திருத்துவதோடு அவர்களை இனம், குலம், நிறம், மொழி, இடம் போன்ற வேற்றுமைகளைக் கடந்து ஒருங்கிணைக்கிறது இஸ்லாம். அவ்வாறு மேற்படி தீமைகளுக்கு எதிரான உலகளாவிய வலுவான சக்தியாக உருவாக்குகிறது.

# சொல்லும் செயலும் தர்மமே

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மக்கள் தமது மூட்டுக்கள் ஒவ்வொன்றுக்காகவும் சூரியன் உதிக்கின்ற ஒவ்வொரு நாளிலும் தர்மம் செய்வது அவர்களின் மீது கடமையாகும். இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தர்மமாகும். ஒருவர் தன் வாகனத்தின் மீது ஏறி அமர (அவருக்கு) உதுவுவதும் தர்மமாகும். அல்லது அவரது பயணச் சுமைகளை அதில் ஏற்றி விடுவதும் தர்மமாகும். நல்ல (இனிய) சொல்லும் தர்மமாகும். ஒருவர் தொழுகைக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் தர்மமாகும். தீங்கு தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதும் ஒரு தர்மமேயாகும்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி (2989)

# அமைதியின்மைக்கான காரணங்களும் தீர்வுகளும்

நாம் வாழும் சமூகத்தில் அமைதி என்பது திரும்ப வேண்டுமானால் கீழ்கண்ட முக்கிய காரணிகளை சீர்செய்தாக வேண்டும். இறைவன் வழங்கிய மார்க்கமான இஸ்லாம் அதற்கான வழிகளையும் கூறுகின்றது.

## 1) தனிநபர் ஒழுக்க சீர்கேடு

நாட்டில் குற்றங்களும் பாவசெயல்களும் மோசடிகளும் நாளுக்கு நாள் பெருகுவதற்கு ஒரு முக்கிய காரணம் மக்களிடையே பாவங்களைப் பற்றிய குற்ற உணர்வும் வெட்க உணர்வும் இல்லாமையாகும். தனி நபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் தன் செயல்பாடுகளுக்காக தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வு நாளுக்கு நாள் பெருகி வருவதை நாம் காணலாம். நாடே குற்றம் செய்யும்போது நாம் மட்டும் ஏன் செய்யக்கூடாது என்ற உணர்வும் சிறிய குற்றம் செய்பவன் பெரிய குற்றம் செய்பவனைக் காரணம் காட்டி தன் செயலை நியாயப்படுத்திக் கொள்ளும் போக்கும் குற்றங்கள் பற்றிய பொறுப்புணர்வையும் வெட்க உணர்வையும் சமூகத்தில் இல்லாமல் ஆக்கி விடுகின்றன..

**இறைத்தீர்வு:** ஒன்றே மனிதகுலம், படைத்தவன் ஒருவன் மட்டுமே வணக்கத்துக்குரியவன், அவனிடமே நம் மீளுதல் உள்ளது, இந்த பூமியில் நாம் செய்த வினைகளுக்கான விசாரணை உள்ளது அதற்கேற்ப சொர்க்கமோ நரகமோ விதிக்கப்பட உள்ளது என்பதை பகுத்தறிவு பூர்வமாக மனித மனங்களில் விதைத்து மக்களைத் திருத்துவது. ('தனி மனித சீர்திருத்தமும் மனிதகுல ஒற்றுமையும்' தனிக் கட்டுரை காண்க)

## 2) சரியும் தவறும் வரையறுக்கப்படாமை

மக்களின் செயல்பாடுகளில் சரி எவை தவறு எவை நல்லவை எவை தீயவை எவை என்றோ நாட்டில் நியாயம் எது அநீதி எது என்பதையோ தீர்மானிக்க தெளிவான உறுதியான எந்த அளவுகோலும் இல்லாதது நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாகும். சட்டத்தை எப்படியும் வளைக்கலாம் என்ற நிலையும் ஆளுக்கு ஒரு நீதி, நாளுக்கு ஒரு நீதி என்று சட்டம் கேலிக்குள்ளாக்கப்படுவதும் இதன் காரணத்தினால்தான்!

## 3) மிக பலவீனமான தொலைநோக்கு இல்லாத சட்டங்கள்

பலவீனமானவையும் சிறிதும் தொலை நோக்கில்லாதவையும் ஆன சட்டங்கள் நடைமுறையில் இருப்பதன் காரணமாக விபச்சாரம், மது, சூதாட்டம், ஓரினச்சேர்க்கை போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் கொடிய குற்றங்கள் கூட சட்ட அங்கீகாரத்தோடு நடைபெறவும் நாளுக்கு நாள் பெருகவும் செய்கின்றன. இவற்றைத் தொடர்ந்து திருட்டும் கொள்ளையும் கற்பழிப்புகளும் கூட எதிர்காலத்தில் சட்ட அங்கீகாரம் பெறக்கூடிய அபாயமும் நாட்டில் உள்ளது.

**மேற்படி இரண்டு காரணிகளுக்கான இறைத்தீர்வு:**

பலதரப்பட்ட மக்களும் பல்வேறு விதமான ஜீவராசிகளும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் இவ்வுலகில் அனைவருக்கும் உரிமைகள் உள்ளன. அவற்றை நீதமாகப் பங்கிடக் கூடிய அதிகாரமும் அறிவும் ஆற்றலும் இவ்வுலகின் அதிபதியாகிய இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பது தெளிவு! அந்த இறைவன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை

செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் அறிவுடைமை. அதுவே நமது இம்மைக்கும் மறுமை வாழ்வுக்கும் நன்மை பயப்பது.

அந்த அடிப்படையில் இறைவன் நமக்கு தொகுத்து வழங்கும் சட்டங்களுக்கே இறை சட்டங்கள் (ஷரீஅத்) எனப்படும். அவற்றை முறையாக அமுல் படுத்துவதால் ஆள்வோருக்கும் செல்வந்தர்களுக்கும் வளைந்துகொடுக்காத உண்மையான நீதி நடைமுறைக்கு வரும். முறையான குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தால் குற்றங்கள் குறைந்து நாட்டில் அமைதி திரும்பும்.

### 4) தவறான ஆன்மீகம்.

பொதுவாக ஆன்மிகம் என்பது மனிதனை பண்புள்ளவனாக ஆக்கக் கூடியது. ஆனால் கடவுளைத் தவறாக சித்தரிப்பதன் காரணமாக மக்கள் உள்ளங்களில் இருந்து கடவுள் நம்பிக்கையும் இறையச்சமும் விலகிப் போகின்றன. உதாரணமாக சர்வ வல்லமையும் நுண்ணறிவும் கொண்ட கடவுளுக்கு பதிலாக உயிரும் உணர்வும் இல்லாத பொருட்களையும் இறந்துபோனவர்களின் சமாதிகளையும் காட்டி அவற்றையெல்லாம் கடவுள்கள் என்று கற்பித்தால் அங்கு மக்களிடம் இறையச்சம் என்பது விலகி பாவங்கள் செய்யும் போது உண்டாகும் குற்ற உணர்வு உண்டாகாமல் போகிறது. எந்த ஒரு பாவத்தையும் தயக்கமின்றி செய்யும் துணிச்சல் வந்துவிடுகிறது.

### 5) ஆன்மீகத்தின் பெயரால் கொள்ளை

இறைவழிபாடு என்ற பெயரில் எல்லா மதங்களையும் சார்ந்த இடைத்தரகர்கள் நாட்டு மக்களிடையே மூடநம்பிக்கைகள் பலவற்றைப் பரப்பி இவற்றின் பெயரால் நாட்டின் செல்வங்களை கொள்ளையடிக்கிறார்கள். இதன்மூலம் பொருட்செலவு இல்லாத எளிமையான வழிபாடு வியாபாரமாக்கப்படுகிறது. நாட்டுமக்களின் சேமிப்பும் உழைப்பும் இவர்களால் கறக்கப்பட்டு இவர்கள் நடத்தும் நிறுவனங்களிலும் ஆசிரமங்களிலும் பதுக்கப்படுகிறது.

### 6) கற்பனைப் பாத்திரங்களின் ஆதிக்கம்

நாட்டின் சுமார் 44 கோடி மக்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்ந்துவரும் நிலையில் நாட்டுக்கு அறவே பயனில்லாத பல கற்பனைப் பாத்திரங்களுக்காக நாட்டின் செல்வங்கள் கொள்ளை போகின்றன. தலைவர்களின் சிலைகளுக்கும் மொழித்தாய்களுக்கும் நினைவிடங்களுக்கும் இவற்றைத் தொடரும் மூடநம்பிக்கைகளுக்கும் வீண்சடங்குகளுக்கும் பெருவாரியான செல்வம் அரசால் செலவிடப்படுகிறது. இவற்றின் பெயரால் மூளும் கலவரங்களும் உயிர் மற்றும் உடமை சேதங்களும் பாமரர்களை தொடர்ந்து வறுமையிலும் வாட்டத்திலும் நீடிக்க வைக்கின்றன.

### மேற்படி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இறைத்தீர்வு:

- **சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன் அவன் யாரையும் பெற்றேடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றேடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவனின் தன்மைகளை இவ்வாறு புரிந்துகொண்டு இடைத்தரகர் களுக்கோ மூடநம்பிக்கைகளுக்கோ வீண் சடங்குசம்பிரதாயங்களுக்கோ இடம் கொடாமல் அவனை நேரடியாக வணங்க வேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம். இறைவனை வழிபட எந்தவிதப் பொருட்செலவும் தேவையில்லை.

இந்த எளிய தீர்வின் மூலம் ஆன்மீகத்தின் பெயரால் நடைபெறும் அனைத்துக் கொள்ளைகளில் இருந்தும் மூட நம்பிக்கைகளில் இருந்தும் நாட்டைக் காக்கிறது இஸ்லாம். இவ்வாறு இடைத்தரகர்களால் கொள்ளையடிக்கப்படும் செல்வத்தை மக்கள் நலனுக்காக திருப்பினாலே நாட்டின் வறுமை நீங்கிவிடும்.

## 7) கடவுளின் பெயரால் மனிதகுலத்தில் பிரிவினைகள்

மதங்களின் பெயரால் திணிக்கப்படும் மூடநம்பிக்கைகளின் விளைவாக மனித இனம் கூறுபோடப்பட்டு மனித சகோதரத்துவமும் சமத்துவமும் மறுக்கப்படுகிறது. அதனால் மனிதகுலத்தில் தீண்டாமையும் வெறுப்பும் விதைக்கப்படுகிறது. இவற்றைக் கொண்டு சுயநலமிகள் அரசியல் ஆதாயங்கள் தேடுவதால் இனக் கலவரங்களும் மதக்கலவரங்களும் கற்பழிப்புகளும் படுகொலைகளும் தொடர்கதைகளாகின்றன.

**இறைத்தீர்வு:** ('தனி மனித சீர்திருத்தமும் மனிதகுல ஒற்றுமையும்' கட்டுரை காண்க)

## 8) தகுதியற்றவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு

நாட்டின் உற்பத்திக்கோ மேம்பாட்டுக்கோ எந்தவித பங்களிப்பும் செய்யாததும் நாட்டு மக்களை சோம்பேறிகளாக்கவும் செய்கின்ற திரைப்படம் மற்றும் கிரிக்கெட் போன்ற கேளிக்கைகளுக்கு ஊடகங்களும் அரசும் வீண் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிப்பதால் நாட்டு மக்கள் இதன் பெயரால் வெகுவாக கொள்ளை அடிக்கப் படுகிறார்கள். இவர்கள் நாட்டு மக்களின் உழைப்பின் கனிகளை சுரண்டி வாழ்கிறார்கள். அவர்களின் நேரங்களை பாழ்படுத்துகிறார்கள். ஆனால் மக்களின் இவற்றின் விளைவுகளைப் பற்றிய அறியாமையால் இவர்களை ஆதரிக்கிறார்கள். தங்கள் செல்வங்களை இதற்காக வாரி இறைக்கிறார்கள். நாட்டை ஆள்வதற்கு அறவே தகுதி இல்லாத நடிக நடிகையர்கள், கொடும் குற்றவாளிகள், கொள்ளையர்கள் போன்றோரிடம் நாட்டின் ஆட்சிபீடமும் ஒப்படைக்கப் படுகிறது.

**இறைத்தீர்வு:** நாட்டுக்கும் நாட்டு வளங்களுக்கும் மக்களுக்கும் உரிமையாளன் இறைவனே. இவ்வுலகில் காணப்படும் அனைத்துக்கும் சொந்தக்காரன் நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் ஏக இறைவனே. ஆகவே நம் ஒவ்வொரு செயலுக்கும் அந்த இறைவனுக்கு நாம் பதில் சொல்லியாகவேண்டும் என்ற பொறுப்புணர்வோடு செயல்படும் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தல். அதாவது பதவி சுகத்திற்க்காகவும் செல்வத்திற்காகவும் வேண்டி வெறிபிடித்து அலையும் போலித் தலைவர்களைத் தவிர்த்து இறைவனின் பொருத்தம் நாடி மக்கள் சேவையாற்ற முன்வரும் நபர்களை தேர்ந்தெடுத்தால் நாட்டின் இழிநிலை மாறும்.

## 9) முறையற்ற பொருளாதாரக் கொள்கை:

முறையற்ற வரிவிதிப்பு, வட்டி சார்ந்த வங்கி முறை, சுரண்டல்காரர்களின் அரசியல் ஆதிக்கம், அரசியல்வாதிகளின் குறுக்கீடு போன்றவற்றின் காரணமாக நாட்டின் தொழில் வளர்ச்சியும் வணிகமுறைகளும் விபரீதமான முறையில் பாதிக்கப்படுகின்றன. அதனால் கறுப்புப்பணம், பதுக்கல், வரி ஏய்ப்பு, இலஞ்ச ஊழல்கள் போன்றவை மலிந்து நாட்டை குட்டிச்சுவராக்குகின்றன.

**இறைத்தீர்வு:** நாட்டின் செல்வம் செல்வந்தர்களுக்கு இடையில் மட்டுமல்லாமல் அனைவரிடையேயும் புழங்கும் வண்ணம் பொருளாதார முறையை இஸ்லாம் கற்பிக்கிறது:

- செல்வந்தர்களிடம் நீதமான முறையில் ஜகாத்(ஏழைவரி) தவறாமல்

வசூலிக்கப்பட்டு ஏழைகளைத் தேடிக் கண்டறிந்து அவர்களுக்கே விநியோகம் செய்தல். இன்று நாட்டில் நிலவிலுள்ள 40% வருமான வரி விதிப்பின் விளைவாக உண்டாகும் கருப்புப்பணம், சுவிஸ் வங்கிகளில் பதுக்குதல் போன்றவை ஒழிந்து உள்நாட்டிலேயே அந்த பணம் புழங்க வழிவகை உண்டாகும். (செல்வந்தர்கள் இறைப் பொருத்ததிற்காக தானாகவே முன்வந்து ஜகாத்தை வழங்குவார்கள் என்பது வேறு விஷயம்)

● வட்டியில்லா பொருளாதாரம் நடைமுறைக்கு வரும். வெற்றுப்பணம் குட்டிபோடுவதும் வங்கிகள் வெற்றுக்காகிதங்களை புழக்கத்தில் விட்டு லாபம் சம்பாதிப்பதும் நிற்கும். அதனால் பணத்துக்கு உண்மையான மதிப்பு உண்டாகி, பணவீக்கம், ஊக வாணிபம், மோசடிகள் ஒழிக்கப்படும். பணக்காரர்களை மேலும் பெரிய பணமுதலைகளாகவும் ஏழைகளை பரம ஏழைகளாகவும் மாற்றும் இன்றைய பொருளாதார அமைப்பு மாறி முனைவோர் அனைவருக்கும் தக்க வாய்ப்பளிக்கும் திட்டங்கள் அமுலுக்கு வரும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வந்து விட்டாலே நாட்டின் வறுமை ஒழிந்து நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து விடும் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

### 10) குறைபாடுகள் மலிந்த கல்வித் திட்டம்

கல்வியின் முதல் நோக்கம் மனிதனை பண்புள்ளவனாக ஆக்குவதே. அதற்கான எந்த பாடத்திட்டங்களும் நமது கல்வி முறையில் இல்லை. பொருள் சம்பாதிப்பது ஒன்று மட்டுமே குறிக்கோளாக கொண்டு கல்வி கற்பிக்கப்படுவதால் தங்களுக்காக உழைத்த பெற்றோர்களைப் புறக்கணிக்கவும் முதியோர் இல்லங்களில் சேர்க்கவும் செய்கிறார்கள் அவர்களின் மக்கள். மேலும் வாழ்க்கையில் எந்தவகையிலும் பயன்படாத பலவற்றையும் பாடத்திட்டத்தில் உட்படுத்தி மாணவர்களின் நேரங்கள் கணிசமான அளவில் வீணடிக்கப்படுகிறது.

**இறைத்தீர்வு:** சிறுவயது முதல் இறையச்சத்தையும் தனிநபர் ஒழுக்கத்தையும் பள்ளிபாடங்களோடு சேர்த்து கற்பித்தல். மேலும் பயனற்ற மற்றும் மனிதனின் வாழ்க்கை இலக்கை விட்டு திசைதிருப்பக் கூடிய அனைத்தும் தவிர்க்கப்படும். கற்கும் கல்வி மனிதகுல அழிவிற்கு பயன்படாது. மாறாக மனிதகுல மேம்பாட்டுக்கு பயன் அளிப்பதாக மாறும்.

### 11) ஊடக வஞ்சனை

இன்று ஊடகங்களின் மூலம் வதந்திகள் மற்றும் பொய்யான செய்திகளை பரவவிட்டு பொதுமக்களை ஏமாற்றி அதன்மூலம் பகல் கொள்ளைகளையும் இனக்கலவரங்களையும் சுயநல சக்திகள் நிகழ்த்துகின்றன. இதனால் நாடு சந்திக்கும் பொருட்சேதங்களும் உயிர் சேதங்களும் அளவிட முடியாதவை. ஆதாரம் ஏதுமின்றி இவ்வாறு பரப்பப்படும் தகவல்கள் திட்டமிட்டு பரப்பபடுபவையே என்று பின்னர் நிரூபணம் ஆனாலும் இந்த வஞ்சகர்களையும் ஊடகங்களையும் தண்டிக்க எந்த முகாந்திரமும் இல்லாததால் தொடர்ந்து நாடு இக்கொடுமைக்கு பலியாகிறது.

**இறைத்தீர்வு:** ஆதாரமின்றி பொய்களைப் பரப்பி நாட்டில் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்குவது கொலையை விடக் கொடிய குற்றம் என்கிறது குர்ஆன். அந்த அடிப்படையில் குற்றமிழைக்கும் ஊடகக்காரர்களை உரிய முறையில் விசாரித்து தண்டிக்க சட்டம் திருத்தப்படும்போது பெரும்பாலான குழப்பங்கள் தீர்ந்து அமைதி திரும்பும்.

# தனிமனித சீர்திருத்தமும் மனிதகுல ஒற்றுமையும்

மனிதன் தன்னைப்பற்றிய சில மறுக்கமுடியாத உண்மைகளை அடிக்கடி மறந்து விடுவதே அவன் பாவங்கள் செய்வதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. அதில் மிக முக்கியமானவை மூன்று. இவற்றை உரிய முறையில் அவனது பகுத்தறிவு ஏற்கும் வகையில் அவனுக்கு நினைவூட்டினால் அவனை சீர்திருத்த முடியும்.

இஸ்லாம் இந்த மூன்று உண்மைகளை மனித மனங்களில் ஆழமாக விதைப்பதன் மூலம் மனிதனை பாவங்களில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கிறது. மேலும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் பிரிவினை வாதங்களில் இருந்தும் விடுவித்து உலகளாவிய சகோதரத்துவத்தையும் மனித சமத்துவத்தையும் நாடுகளிடையே ஒற்றுமையையும் நிலைநாட்ட வழிகோலுகிறது.

**1.ஒன்றே குலம்:**

அனைத்து மனிதகுலமும் ஆதித் தந்தை மற்றும் ஆதித் தாயின் சந்ததிகளே, நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்ற உண்மையை திருக்குர்ஆனில் இறைவன் இவ்வாறு நினைவூட்டுகிறான்:

**● மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும்,பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினரே என்ற உணர்வு மேலோங்கும்போது சக மனிதனை தனது சகோதரனாக சகோதரியாகப் பார்க்கும் பண்பு மனிதனுக்கு வந்துவிடுகிறது. அங்கு நிறத்தின், இனத்தின், மொழியின், நாட்டின் பெயரால் உடலெடுக்கும் பிரிவினைவாதங்களும் உயர்வு தாழ்வுகளும் கிள்ளி எறியப்படுகின்றன. மாற்று மொழியினரும் நிறத்தவரும் அண்டை மாநிலத்தவரும் நம் சகோதரர்களே என்ற உணர்வு மக்களை ஆட்கொண்டால் இன்று நடக்கும் பெரும்பாலான மனித உரிமை மீறல்களையும் கலவரங்களையும் இல்லாமல் ஆக்கிவிடலாம்.

**2..ஒருவனே இறைவன்:**

ஒன்றே மனிதகுலம் எனும்போது நம் அனைவருக்கும் இருப்பது ஒரே ஒரு இறைவனே என்பது தெளிவு. அவனது தன்மைகளை திருக்குர்ஆன் இவ்வாறு கற்பிக்கிறது:

**● சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன் அவன் யாரையும் பெற்றேடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவன் என்று ஒருவன் இருந்தால் அவனது தன்மைகள் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்பதை பகுத்தறிவோடு சிந்திக்கும் யாரும் புரிந்து கொள்ள முடியும். இறைவனை இவ்வாறு புரிந்துகொண்டு இடைததரகர்கள்

யாருமின்றி அவனை நேரடியாக வணங்க இஸ்லாம் கற்றுத் தருகிறது. இவ்வாறு வணங்கும்போது கடவுளின் பெயரால் யாரும் யாரையும் ஏமாற்றவோ கடவுள் அல்லாதவற்றைக் காட்டி இவைதான் கடவுள் என்று கூறி பணம் சம்பாதிக்கவோ முடியாது. இடைத்தரகர்களும் மூடநம்பிக்கைகளும் வீண் சடங்கு சம்பிரதாயங்களும் ஒழிகின்றன.

இறைவன் அல்லாத கற்பனை உருவங்களுக்கோ உயிரும் உணர்வும் அற்ற படங்களுக்கோ சிலைகளுக்கோ எந்த இறைத்தன்மையும் கிடையாது என்றும் அவற்றை வணங்குவதோ அவற்றுக்கு மரியாதை செய்வதோ பெரும் பாவமாகும் என்றும் இஸ்லாம் திட்டவட்டமாக அறிவிக்கிறது.

● **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை**

**(திருக்குர்ஆன் 5:72)**

## 3. இறைவனின் நீதிவிசாரனையும் மறுமை வாழ்வும்.

இன்று நாம் வாழும் பிரபஞ்சமும் தற்காலிகமானது. இதில் மனிதர்களாகிய நம் வாழ்வும் தற்காலிகமானது. இதில் நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தவணையில் வந்து போகிறோம். இந்த குறுகிய வாழ்வில் யார் இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்கிறார்களோ அவர்களுக்கு சொர்க்கமும் கீழ்படியாதோருக்கு நரகமும் மறுமை வாழ்வில் வாய்க்கும். இந்த உண்மையை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

● **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்.இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.**

**(திருக்குர்ஆன் 3:185)**

அதாவது, இவ்வுலகில் நாம் செய்யும் பாவங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் தண்டனையாக நரகமும் புண்ணியங்களுக்கும் தியாகங்களுக்கும் பரிசாக சொர்க்கமும் கிடைக்கும்.

மேற்படி நம்பிக்கைகளை வெறும் எண்ணத்தளவில் விட்டுவிடாது செயல்முறையில் கொண்டுவர ஐவேளைத் தொழுகை, ஜகாத் என்னும் கட்டாய தர்மம், ரமஜான் மாதத்தில் விரதம் போன்றவற்றைக் கடமைகளாக்கியுள்ளது இஸ்லாம். மட்டுமல்ல இவற்றைக் கூட்டாக இணைந்து நிறைவேற்றவும் பணிக்கிறது. அதனால் சமூக சீர்திருத்தமும் சமத்துவம் சகோதரத்துவம் பேணுவதும் எளிதாகிறது.

இந்த நம்பிக்கைகளும் நடைமுறைகளும் சமூகத்தில் வேரூன்ற நாளடைவில் மொழி,நிறம், இடம், செல்வம் போன்ற எதுவும் மனித இனத்தைப் பிரிக்கமுடியாது. சமத்துவமும் சகோதரத்துவமும் தானாகவே சமூகத்தில் மலரும். நாட்டு வளங்களை சகோதர உணர்வோடும் இறைவழிகாட்டுதல்களின் அடிப்படையிலும் பங்கிட்டுக்கொள்ள மக்கள் தானாகவே முன்வருவார்கள். அதனால் ஏற்படும் இழப்புகளை இறைப் பொருத்தத்திற்காக மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள்!

தொடர்ந்து எல்லைக்கோடுகளால் பிரிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மத்தியில் பகைமை உணர்வுகள் மறையும். காலப்போக்கில் நாடுகளும் மறைந்து அனைத்து உலகும் ஒன்றாக யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கனவு நனவாகும்!

# பர்வீன் - நடராஜன் காதல் கதை

இதைக் கதை அல்லது காவியம் என்று எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள். இது நிஜமா கற்பனையா என்ற ஆராய்ச்சியும் இங்கு தேவையில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. சிறு சிறு மாற்றங்களோடு அன்றாடம் நாட்டில் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கும் நிகழ்வு இது. இன்று காதல்வயப்பட்டுக் கொண்டிருக்கும் கன்னிப் பெண்களுக்கு இது சமர்ப்பணம்.



அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்று தொடங்கித் தொடர்ந்தது அவர்களின் காதல் கதை. பர்வீன் குடியிருந்த அதே தெருவில் ஒரு ஐந்தாறு வீடு தள்ளி இருந்தது நடராஜனின் வீடு. பர்வீன் படித்துக்கொண்டிருந்து பிளஸ் டூ. நடராஜன் அப்போது பெயிண்டர் வேலைக்குப்போய்க் கொண்டு இருந்தான். பார்க்க அழகாக இருந்தான்.

பர்வீனின் அப்பாவுக்கும் கூலிவேலைதான். வீட்டில் பெயரளவுக்குத்தான் இஸ்லாம். இஸ்லாம் கூறும் ஐவேளைத் தொழுகை எல்லாம் அவர்களின் வீட்டில் இல்லை. சடங்குக்கு வெள்ளிக்கிழமை மட்டும் பள்ளிக்குச் செல்வார் பர்வீனின் தந்தை பாரூக். தாய்க்கும் மகளுக்கும் அதுவும் இல்லை. அருகாமையில் உள்ள பள்ளிவாசலில் பாங்கு (தொழுகை அழைப்பு) ஒலி கேட்கும்போது தலையில் முக்காடு போட்டுக்கொள்ளும் பழக்கம் எப்படியோ தாய் சல்மாவுக்கு இருந்தது.

தினமும் பார்வைப் பரிமாற்றத்தில் தொடங்கிய பர்வீன்-நடராஜன் காதல் நாள் செல்லச்செல்ல மறைமுக சந்திப்புகளில் வளர்ந்தது. அது முற்றி பெற்றோர்களின் பலத்த எதிர்ப்புகளையும் கடந்து ரிஜிஸ்டர் திருமணத்தில் முடிந்தது. அனைவரையும் பகைத்துக்கொண்டு தனிக்குடித்தனமும் தொடங்கினர். திருமணத்திற்கு முன்னதாக நடராஜன் நாசராக மாறியிருந்தான். நாசருக்கும் இஸ்லாம் என்றால் என்ன என்பதை எடுத்துச்சொல்ல எவரும் அங்கு இல்லை.

துடிப்பும் துள்ளலுமாக, சிரிப்பும் சந்தோஷமுமாக இருந்த காதலர்கள் திருமணம் செய்து கணவன் மனைவியாக வாழ்க்கையில் இணைந்த பிறகு அவை அனைத்தும் அசுர வேகத்தில் களை இழக்க ஆரம்பித்தன. யாரைப் பற்றிய நினைப்பே ஆனந்தம் கொண்டு வந்ததோ, அவர்களின் அருகாமையே இப்போது மெல்லமெல்ல எரிச்சலாக மாறியது. காதல் வயப்பட்டிருந்தபோது, அந்த உணர்வு மட்டுமே மேலோங்கியிருந்தது. வாழ்க்கையின் யதார்த்தங்கள் பற்றி சிந்திக்க மறந்தார்கள். திருமணத்திற்கு முன்னர் பெற்றோர்களும் மற்றவர்களும் அவற்றை நினைவூட்டிய போது அவை உள்ளே நுழையவில்லை. பர்வீனின் உற்ற பள்ளித்தோழி அஸ்மா படித்துப்படித்துச் சொன்ன அறிவுரைகள் எதுவும் பர்வீனிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

அஸ்மாவுக்கு மார்க்கப் பற்று இருந்தது. அறிவும் இருந்தது. வகுப்பு இடைவேளையின்போது கூட தொழுகையை நிறைவேற்றுவாள். அஸ்மா எவ்வளவோ இறை எச்சரிக்கைகளை எடுத்துரைத்தும் எதுவும் எடுபடவில்லை. அவள் எடுத்துரைத்த குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் பர்வீனின் செவிகளைத் தாண்டி இதயத்திற்குள் நுழைந்தாலும் ஷைத்தான் குறுக்கே நின்று ‘விட்டுக்கொடுக்காதே பர்வீன், காதலே பெரிது’ என்றான்.

அன்று ‘வாழ்ந்தால் அவரோடுதான் வாழ்க்கை. இல்லையேல் மரணம்’ என்று

அடம்பிடித்தாள் பர்வீன். 'அவளோடுதான்...' என்று அடம்பிடித்தான் நடராஜன். இன்றோ... எவ்வளவு அற்புதமான தலைகீழ் திருப்பம்!

-------------------------

குடும்ப வாழ்க்கையின் பொறுப்புகள் ஒவ்வொன்றாகத் தலைதூக்க ஆரம்பித்தபோது இருவருக்கும் அது அலுத்துப்போனது. இரு தரப்பு பெற்றோர்களுக்கும் இவர்கள் விடயத்தில் ஈடுபாடு இல்லாது போனதால் அவர்களிடம் இருந்து எந்தவித உதவியும் ஆதரவும் இல்லாமல் இருந்தது. நாசரின் சம்பளம் ஒன்றுதான் அவர்களின் வருமானம். பர்வீன் கர்ப்பமாகி விட்டாள் என்று தெரிந்த உடன் அடுத்துவரக்கூடிய குடும்பப் பொறுப்புகள் பற்றிய கவலைகள் நாசரை வாட்டத் தொடங்கின.

நாள் செல்லச்செல்ல மாலையில் வீட்டுக்கு வருவதையே வெறுத்தான் நாசர். நண்பர்களின் சேர்க்கை வீட்டைவிட இனித்தது. மிகவும் தாமதமாகவே வீட்டுக்கு வந்தான். குடிப்பழக்கமும் தொற்றிக்கொண்டது. வறுமையும் பற்றாக்குறையும் தலைக்காட்ட ஆரம்பித்தன. குடிபோதையில் வீட்டுக்கு உளறிக் கொண்டே வருவான் நாசர். சிலவேளைகளில் நடுவீட்டில் வாந்தியும் எடுப்பதுண்டு. ஒருநாள் இருட்டில் டாய்லெட் என்று பாவித்து பீரோக் கதவைத்திறந்து மூத்திரமும் பெய்து வைத்திருந்தான் நாசர்.



ஒருநாள் நடு இரவில் வீடு திரும்பிய நாசர் குடிபோதையில் இருந்த தன் நண்பனையும் அழைத்து வந்திருந்தான். "பர்வீன் இவன்தான் சார்லி. பாவம், அவன் வீடு ரொம்ப தூரம். அதா அந்த ஓரத்தில படுத்துட்டு காலைல எந்திரிச்சுப் போயிருவான்." சர்வ சாதாரணமாகச் சொன்னான் நாசர். விடியும்வரை இடித்துக்கொண்டிருந்த இதயத்தோடு உறங்காமலே கழித்தாள் பர்வீன்.

நாசரின் நடவடிக்கைகளைப் பற்றி கண்டித்தால் அடியும் அடிமேல் அடியும் விழ ஆரம்பித்தது பர்வீனுக்கு. முறுக்கேறிய குடிபோதையில் வருபவனிடம் நியாயம் பேசவா முடியும்? எதிர்பேச்சு பேசப்பேச அடியின் வீரியம் கூடியது. வாழ்வே வெறுத்தது பர்வீனுக்கு. அன்று 'உன்னை என் கண்ணின் மணியைப்போல் காப்பேன்' என்று தேனொழுகப் பேசிய அவனா இவன்? ஏமாற்றத்திற்கும் விரக்திக்கும் ஆளான பர்வீனுக்கு ஆறுதல் சொல்லவோ நாசரைக் கண்டித்து நிறுத்தவோ எவரும் அங்கு இல்லை. தாளிடப்பட்ட வீட்டிற்குள் இரவுநேரத்தில் நடக்கும் கொடுமைகள் வேறு யாருக்குத்தெரியும்?

அன்றாட அராஜகங்களை வெதும்பிய மனதோடும் கண்ணீரோடும் சகித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியேதும் தெரியவில்லை கர்ப்பிணி பர்வீனுக்கு! கண்மூடித்தனமான காதலின் விளைவுகள் எவ்வளவு விபரீதமானவை என்பதை பர்வீன் தினமும் அனுபவித்து அறிந்தாள். கவிதைகளிலும் காவியங்களிலும் புனிதமானது என்று வருணிக்கப்படும் காதல் எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை நேரடியாக உணர்ந்தாள்.

பக்கத்து வீட்டுக்காரிகள் அவ்வப்போது வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். அபூர்வமாக அம்மா சல்மா வந்தார். கண்ணீர் உகுத்துவிட்டுச் சென்றார். குடிகாரக் கணவனை நிதானத்தில் பார்த்தே மாதங்கள் பலவாயிற்று.

-----------------------------

அரசு மருத்துவமனையில் பெண்குழந்தையைப் பெற்றெடுத்தாள் பர்வீன். பெற்றெடுத்த மகளின் மலர்முகம் அவளுக்கு பாலைவனத்தில் கண்டடைந்த சோலை போல ஆறுதலளிப்பதாக இருந்தது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அண்டை வீட்டுக்காரிகள் வந்து உதவினார்கள்.

அதோ, வராண்டாவில் நாசரின் குடிகாரக் குரல்.... அங்கும் கூட குடிபோதையில்தான் வரவேண்டுமா பாவி? தான் பெற்றெடுத்த மகளின் முகம் காண வேண்டும் என்று ஏதோ ஒன்று நாசரைத் தள்ளிக்கொண்டு வந்தது. அருகே வந்தான்.. ஆனால் நிற்கமுடியாமல் தள்ளாடிக் கீழ்விழுந்தான். அவமானத்தில் துடித்தாள் பர்வீன்... ஆஸ்பத்திரிக் காவல்காரர்கள் வந்து அவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள். அப்படியே கொண்டுபோய் மருத்துவமனை காம்பவுண்டுக்கு வெளியே நடைபாதையில் போட்டுவிட்டுச் சென்றார்கள். ஆதரவற்ற குடிகாரனை வேறு என்னதான் செய்யமுடியும் அவர்களால்?

விரக்தியில் அயர்ந்து படுத்திருந்த பர்வீனுக்கு ஏனோ தோழி அஸ்மாவின் அறிவுரைகள் நினைவுக்கு வந்து உறுத்தின. எவ்வளவு ஆழமான வார்த்தைகள் அவை! அன்று ஏன் நான் அவற்றை உள்வாங்கவில்லை? தன்னையே நொந்து கொண்டாள் பர்வீன். பாழாய்ப்போன இந்தக் காதல் என்ற பேய்... அனைத்தையும் கெடுத்து நாசமாக்கிவிட்டது...மனதுக்குள் புலம்பினாள் பர்வீன்.

-------------------

ஆம், அன்று நிலைமை முற்றிக்கொண்டு வந்தபோது அஸ்மா அவளுடைய அம்மாவோடு வீட்டுக்கு வந்திருந்தாள். எப்படியாவது பர்வீனைத் திருத்தவேண்டும் என்ற என்பது அஸ்மாவின் நோக்கம்.

“கேளடி பர்வீன், நாம இப்போ வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு தற்காலிக வாழ்க்கைன்னு தெரியுமில்ல? இது ஒரு பரீட்சை மாதிரி. இதுல நம்மைப் படைச்ச இறைவனை மறந்துட்டு வாழக்கூடாது. அவனோட கட்டளைப்படி வாழனும். அதுக்குப் பேருதாண்டி இஸ்லாம். அவன் நம்ம கிட்ட எத செய்யணும் சொல்றானோ அதை நாம செய்யணும். அதுக்குப் பேருதான் புண்ணியம். எதைச் செய்யக்கூடாதுண்ணு தடுக்கிறானோ அதுக்குப் பேருதான் பாவம். இப்ப நீ செஞ்சுகிட்டு இருக்கிறது பாவம்டீ! அதுவும் சாதாரணப் பாவம் இல்லடீ, பெரும்பாவம்...!”

“ஏண்டீ காதல்ங்கிறது இயற்கையானது. இதப் போயி பெரும்பாவம்னு சொல்றே?

“பசிகூட இயற்கையானதுதான். அதுக்காக திருடி சாப்ட்டா பாவந்தானே? அதுமாதிரிதான். அல்லாஹ் தடுத்த வழில காதலையும் காமத்தையும் தணிக்கறது பாவம்தான். அதுக்குதான் கல்யாணம்னு ஒன்னு இருக்கு. அதுலே சட்டப்படி இணைஞ்சதுக்குப் பின்னாடி மட்டும்தான் ஒரு அந்நிய ஆணும் அன்னியப் பெண்ணும் காதலிக்க முடியும். காமத்தைத் தணிக்கவும் முடியும். அத விட்டுட்டு நீ எதைக் காதல்னு நெனச்சிட்டு சாகறியோ அதெல்லாம் கள்ளக்காதல்தான் அல்லது விபச்சாரம்தான் அல்லாஹ்கிட்ட.. புரிஞ்சுதா?”

கேட்டதும் அஸ்மாவின் மேல் கோபம்கோபமாக வந்தது பர்வீனுக்கு. பொருட்படுத்தாமல் தொடர்ந்தாள் அஸ்மா...

“ஏண்டி, இந்த உடல், உயிர், உணவு, நீரு, காற்று எல்லாம் அல்லாவுக்கு சொந்தமானது. எல்லாத்தையும் அனுபவிச்சுட்டு அவன ஏத்துக்காம அவன் சொன்னதுக்கு மாற்றமா நடந்தா அவன் தண்டிக்க மாட்டான்னு நெனச்சுட்டு இருக்கியா? அல்லாஹ் நம்முடைய நன்மைக்கு வேண்டிதாண்டி அந்தக்

கட்டுப்பாடுகளை வச்சிருக்கான். அவன் நமக்கு குர்ஆன் ஹதீஸ் மூலமா என்ன சொல்றானோ அப்படி வாழ்ந்தா இங்கேயும் உன் வாழ்க்கை ஒழுங்கா அமைதியா இருக்கும். மருமைல சொர்க்கத்துக்கும் போலாம். ஆனா அத அலட்சியம் பண்ணிட்டு உன் மன இச்சைப்படி போனா இங்கேயும் வாழ்க்கைல சீரழிஞ்சு போவே, மருமைல நரகம்தாண்டி கிடைக்கும்."

"அது மட்டுமா? ஏண்டி உன்னப் பெத்துவளர்த்த உங்க அம்மா அப்பாவுக்கு நீ செய்யற வஞ்சனையைப் பத்தி யோசிச்சியா? நாளைக்கு நீயும் அம்மாவாயிருவே. அப்ப உன்னோட புள்ள இப்படி கண்டவனோட ஓடிபோச்சுன்னா உனக்கு எப்படிடி இருக்கும்? கொஞ்சம் நிதானமா யோசிச்சுப்பாருடீ..."

"நீ நினைக்கிற மாதிரி அவரொண்ணும் மோசமானவர் இல்லடி. ரொம்ப தங்கமானவருடி. உனக்கு சொன்னாப் புரியாது.. என்ன செய்ய?"

"உனக்கு இப்ப காதல்ங்கற ஷைத்தான் பலமாப் பிடிச்சிருக்கு. அது விட்டுப்போற வரைக்கும் எதுவும் உள்ளே நுழையாது. பர்வீன் கொஞ்சம் நிதானமா யோசிச்சுப் பாருடி, கல்யாணம்னு சொன்னா அது வாழ்க்கையோட ஒரு புதிய அத்தியாயம் தொடங்கற மாதிரி. சரியான துணையைத் தேர்ந்தெடுக்காட்டி வாழ்நாள் பூரா அவஸ்ததான். அல்லாகிட்ட நம்ம செயல்களுக்கு பதில் சொல்லியாகணும் அப்படீங்கற பொறுப்புணர்வு கணவனுக்கும் வேணும் மனைவிக்கும் வேணும். அப்பதான் கல்யாண வாழ்க்கை சரிப்பட்டு வரும். ஆனா நீ இப்ப கட்டிக்கப்போற ஆளுக்கு இந்த நம்பிக்கை எல்லாம் கிடையாதுன்னு உனக்கே தெரியும்."

"உனக்காக வேண்டி நான் முஸ்லிமா கூட மாறத் தயார்னு அவர் சொல்லியிருக்கார்டி, தெரியுமா உனக்கு?"

"உன்ன மாதிரி ஒரு முட்டாளப் பார்க்கவே முடியாதுடி. உனக்கே இஸ்லாம்னா என்னான்னு தெரியாது. நீ கட்டிக்கப்போற ஆளுக்கு என்ன தெரியப் போகுது? இஸ்லாம் அப்படின்னு சொன்னா கீழ்படிதல்னு அர்த்தம். இங்கிலீஷ்ல டிசிப்ளின்னு சொல்லுவாங்க. அதாவது நம்மைப் படைத்து பரிபாலித்து வர்ற இறைவனுடைய கட்டளைக்கு கீழ்படிஞ்சு ஒழுக்கம் பேணி வாழ்வதற்குப் பேருதான் இஸ்லாம். அப்படி வாழறவங்களுக்கு பேருதாண்டி அரபிலே முஸ்லிம். அல்லாஹ் சொன்னதுக்கு அப்படியே மாற்றமா செஞ்சுட்டு இஸ்லாமா? கல்யாணத்துக்கு அப்புறம்தான் காதல்னு அல்லாஹ் சொல்றான். ஒழுக்கமா கட்டுப்பாடா வாழறவங்களுக்குப் பேருதாண்டி முஸ்லிம். சும்மா முஸ்லிம் குடும்பத்திலே பொறந்துட்டாலோ, புர்க்கா போட்டுட்டாலோ, தொப்பி மாட்டிகிட்டாலோ அரபிலே பேர வச்சிகிட்டாலோ யாரும் முஸ்லிம் ஆயிற முடியாது தெரியுமா? அப்படி காட்டுப்பாடா வாழ்ந்தாதாண்டி நாளைக்கு மறுமைல சொர்க்கத்துக்கு போக முடியும். இல்லாட்டி நரகந்தான். நரக வேதனைன்னா சும்மா இல்ல, உடம்பெல்லாம் நெருப்பு பத்தி எரிஞ்சுகிட்டு இருக்கும். கொஞ்சம் யோசிச்சுப்பாருடி"

ம்ஹூம், மசியவில்லை பர்வீன். ஆடாமல் அசையாமல் குத்துக்கல்லாய் அமர்ந்திருந்தாள். காதல் கண்ணையும் புத்தியையும் பலமாக மறைத்திருந்தது. பர்வீனின் அம்மா சல்மா பேச ஆரம்பித்தார்.

"நாங்களும் தப்பு பண்ணிட்டோம் அஸ்மா. சின்ன வயசிலேருந்து எங்க குழந்தைகளை மதரசாவுக்கே அனுப்பல. இஸ்லாத்தைப் பற்றி நாங்களும்

கத்துக்கல. இவங்களுக்கும் கத்துக் குடுக்கல. பக்கத்து வீடுக மாதிரியே வாழ்ந்துட்டோம். இவங்க அப்பாவுக்கும் தொழுகை இல்ல. நானும் பொடுபோக்கா இருந்துட்டேன். நீ சொன்ன மாதிரி உண்மையான முஸ்லிமா வாழ்ந்திருந்தா இந்த விபரீதமெல்லாம் நடந்திருக்காது.”

“ஆமா ஆன்டி, அஞ்சுநேர தொழுகைய அல்லா கட்டாயம் பண்ணியிருக்கறது கூட இந்த வாழ்க்கைல ஒழுக்கம் வரணுங்கறதுக்குதான் ஆன்டி. குழந்தைகள எப்படி வளர்க்கணும், என்ன கத்துக் குடுக்கணும், அம்மா அப்பாவ எப்படி கவனிக்கணும், உறவினர்கள் அண்டை வீட்டுக் காரங்களோடு எப்படி நடந்துக்கணும், யார் யாரைக் கல்யாணம் பண்ணிக்கலாம் இப்படி வாழ்க்கையோட எல்லா விஷயங்களப் பத்தியும் இஸ்லாம் நமக்கு தெளிவா சொல்லிக் குடுக்குது ஆன்டி. ரொம்ப முக்கியமா பெண் குழந்தைகள எப்படி பாதுகாப்பா அரவணைச்சு வளர்க்கணும், அவங்கள எப்படிப் பட்டவங்களோடு கல்யாணம் முடிச்சுக் குடுக்கணும், அவங்களுக்கு எப்படிப்பட்ட உடை அணிவிக்கணும் இன்னும் அதுபோல விஷயங்கள் தெளிவா சொல்லுது இஸ்லாம்.

“அப்படியா?”

“ஆமா ஆன்டி, பெண்கள்ல இருந்துதான் ஒரு சமூகமே உருவாகுது. பெண்கள் ஒழுக்கம் கெட்டுப்போனா சமூகமே ஒழுக்கம் கேட்டுப் போயிரும். அதனாலதான் இஸ்லாம் பெண்குழந்தை பாதுகாப்புக்கு இவ்வளவு முக்கியத்துவம் குடுக்குது. பெண்ணை ஒழுக்கமா வளர்த்ததுக்கு அப்புறம் ஒழுங்கான ஆண்களா தேடிக் கண்டுபிடிச்சு கல்யாணம் பண்ணியும் குடுக்கவேண்டியது பெற்றோருடைய கட்டாயக் கடமைண்ணு இஸ்லாம் சொல்லுது. அழகு, அந்தஸ்து, செல்வம் இதை எல்லாத்தையும் விட இறையச்சத்துக்கு முன்னுரிமை குடுத்து வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுங்க அப்படீன்னு நம்முடைய நபி சொல்லியிருக்காங்க. அப்புறம் அல்லா கூட குர்ஆன்ல சொல்றான் பாருங்க:

**உங்கள் பெண்களை இணைவைக்கும் ஆண்களுக்கு - அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும் வரை - மணமுடித்துக் கொடுக்காதீர்கள். இறைநம்பிக்கையுடைய அடிமையான ஆண் (அடிமையில்லாத) இணைவைக்கக் கூடிய ஆணைவிடச் சிறந்தவன். அவன் உங்களைக் கவர்ந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 2:221)**

ஆன்டி, நம்மைப் படைத்த இறைவனுக்குதான் அரபிலே அல்லாஹ் அப்படீன்னு சொல்றோம். இணைவைக்கறது அப்படீன்னா இறைவன் அல்லாதவற்றை வணங்கறது. அதாவது சூரியன் சந்திரன், மரம், செடி, உருவங்கள் சமாதிகள் இப்படிப்பட்டவைகள வணங்கறது. அதுதான் பாவங்கள் எல்லாத்துலேயும் மிகப்பெரிய பாவம்னு குர்ஆன் சொல்லுது. இந்தப் பாவத்தை மட்டும் அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான், இப்படிப்பட்டவங்களுக்கு நிரந்தரமான நரகம்னு அல்லாஹ் சொல்றான்.”

“அப்போ, முஸ்லிம் பொண்ணுகள முஸ்லிம் அல்லாதவங்களுக்கு கட்டிகொடுக்கக் கூடாதுன்னு குர்ஆன் சொல்லுதா?”

“கண்டிப்பா ஆன்டி, இப்போ காதல் கீதல் அப்படீன்னு போய் ஒட்டிக்குவாங்க, அப்புறம்தான் அதோட டேஞ்சர் எல்லாம் அனுபவிப்பாங்க. இஸ்லாம் ஒழுக்கமா கட்டுப்பாடா வாழறதுக்கு வழிகாட்டுது. எப்படி வேணுன்னா வாழு இல்லாட்டி உன் மனம்போன போக்கில வாழுன்னு மத்தவங்க சொல்றாங்க. ரெண்டும் எப்படி ஒண்ணாப் போக முடியும்?

போனாலும் எவ்வளவு நாளைக்கு?"

"ஏண்டி, அவருதான் முஸ்லிம் ஆயிர்றேன்னு சொல்றாருல்ல. அப்புறம் என்ன?" வெடித்தாள் பர்வீன்.

"நீ ஒரே தீர்மானமா இருக்கிறேன்னு புரியுது. நான் சொல்லவந்தத சொல்லிட்டு போயிர்றேன். அப்புறம் உனக்கு என்ன தோணுதோ அதச் செய். பர்வீன், நீ மொதல்ல இஸ்லாம்னா என்னான்னு புரிஞ்சுகிட்டு அல்லாஹ்கிட்ட பாவமன்னிப்பு கேட்டு ஒரு உண்மையான முஸ்லிமா மாறு. அப்புறம் இதுதான் இஸ்லாம் அப்படின்னு நடராஜனுக்கு சொல்லு. மனதார இஸ்லாத்த ஏத்துகிட்டு முஸ்லிம் ஆகறாரான்னு கேளு. ஒத்துகிட்டா ஒரு மாசம் நம்ம ஜமாஅத்துல இஸ்லாமிய அடிப்படைக் கல்விக்கான பயிற்சி ஏற்பாடு இருக்கு. அதுல சேர்த்து விடு. அது முடிஞ்சு மனமாற்றமும் குணமாற்றமும் வந்திருக்கான்னு பாரு. அப்படி இருந்தா மட்டும் அவர கல்யாணம் பண்ணிக்கோ. இல்லாட்டி மறந்துட்டு வேற மாப்பிளையத் தேடு. இதுதாண்டி நம்மப் படச்சவன் நம்முடைய நன்மைக்காக சொல்ற வழி. குர்ஆன்ல அவன் சொல்றதப் பாரு:

**(இணை வைக்கும்) அவர்கள் நரகத்தின் பால் உங்களை அழைக்கின்றனர். அல்லாஹ்வோ தனது உத்தரவின் மூலம் மன்னிப்பின்பாலும் சொர்க்கத்தின் பாலும் அழைக்கிறான். அல்லாஹ் தனது வசனங்களை மக்கள் படிப்பினை பெறுவதற்காக தெளிவுபடுத்துகிறான்". (அல்குர்ஆன் 2:221)**

உனக்கு அமைதியான மணவாழ்க்கை வேணும்னா அல்லாஹ் சொன்னவழிய தேர்ந்தெடு. இங்கேயும் அமைதி கிடைக்கும். மறுமைல நிரந்தரமான சொர்க்கமும் கிடைக்கும். அது வேண்டாம்னு உங்க மனம்போன வழில போனீங்கன்னா இங்கேயும் வேதனைதான். மறுமைல அதைவிடப் பெரிய நரக வேதனைதான். .... இனி உன்னோட விருப்பம்!"

சொல்லிவிட்டு தன் அம்மாவையும் அழைத்துக்கொண்டு போய்விட்டாள் அஸ்மா.

நடந்ததை நினைக்க நினைக்க அழுகைக் கடலாகப் பொங்கியது. அருகே பாலுக்காக குழந்தை வாய்விட்டு அழுததைக் கேட்டு உணர்வுக்கு வந்தாள் பர்வீன். பால் கிடைத்ததும் குழந்தையின் அழுகை நின்றது. ஆனால் நிற்காமல் தொடர்ந்தது பர்வீனின் அழுகை!

# சாலையோர விதிமுறைகள்

தெருக்களில் அமர்ந்திருப்போர் நல்லதையே பேச வேண்டும். இல்லாவிட்டால் அமரக்கூடாது என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது.

நாங்கள் வீட்டின் முற்றத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து, "பாதையில் அமைந்துள்ள இடங்களில் என்ன செய்கிறீர்கள்? பாதையோரங்களில் அமைந்துள்ள இடங்களில் (அமர்வதை விட்டும்) தவிர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். "தவறு செய்வதற்காக நாங்கள் உட்காரவில்லை. பேசிக் கொண்டும் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டும் அமர்ந்துள்ளோம்" என்று கூறினோம். அதற்கு அவர்கள், "அப்படியானால் அதற்குரிய உரிமையைக் கொடுத்து விடுங்கள். பார்வையைத் தாழ்த்துவதும் சலாமிற்குப் பதிலுரைப்பதும் அழகிய முறையில் பேசுவதும் (அதற்குரிய உரிமையாகும்)" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதல்ஹா (ரலி), நூல்: முஸ்லிம் (4020)

<u>அமைதியை நோக்கிய பயணம்</u>

# அமைதிகரமான இல்லறம் காண முதல்படி

ஆரோக்கியமான ஒரு சமூகக் கட்டமைப்பின் ஆரம்பமே நல்ல வாழ்க்கைத் துணையை தேர்தேடுப்பதில்தான் உள்ளது. வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதி மணவாழ்க்கை என்பது. இப்பகுதி இனிதாக அமைதியாக அமைவது எப்படிப்பட்ட வாழ்க்கைத்துணையை ஒருவர் தேர்ந்தெடுக்கிறார் என்பதைப் பொறுத்து அமைகிறது. வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வதில் எத்தனையோ அம்சங்களைக் கவனிக்க வேண்டும் என்றாலும் பருவ வயதையடைந்தவர்கள் வெறும் புறக்கவர்ச்சியில் மயங்கி எதிர்கால மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகின்றனர். சமூகத்தின் சீரழிவுக்கும் காரணமாகின்றனர்.

மோகமும் காமமும் கண்ணையும் புத்தியையும் மறைத்துவிடும். சில மாதங்களில் எதார்த்த நிலைக்கு வந்த பிறகுதான் எத்தனையோ வி'யங்களை கவனிக்கத் தவறிவிட்டோம் என்ற உண்மை உறைக்கும். வாழ்க்கை முழுவதும் நரகமாகி விட்டதை அப்போது தான் உணர்வார்கள். இவ்வாறு மகிழ்ச்சியைத் தொலைத்த பலரை நாம் அன்றாடம் சந்திக்கிறோம்.

குறிப்பாக இளம்பெண்கள் இத்தகைய இனக்கவர்ச்சிக்கு வசப்பட்டுவிட்டால் ஆண்களால் ஏமாற்றப்பட்டு கர்பிணிகளாக்கப்பட்டு கைவிடப்படுகின்றனர். சிலவேளை சிவப்பு விளக்குப் பகுதியில் கூட விற்கப்படுகின்றனர். அவ்வாறு பெற்றெடுக்கும் குழந்தைகளை வளர்க்க அல்லது கொல்லும் நிலைக்கு ஆளாகிறார்கள்.

இந்த இனக்கவர்ச்சியில் மயங்காமல் எதார்த்தத்தைப் புரிந்து கொண்டு நடப்பது எப்படி? இதை வென்றெடுக்கும் வழி என்ன?

### இறை கூறும் வழி

இதற்குத்தான் தெளிவான முறையில் இறைவன் தனது திருமறை மூலமும் திருத்தூதர் மூலமும் வழிகாட்டுகிறான். இறைநம்பிக்கையை முக்கிய அளவுகோலாகக் கூறுகிறான் இறைவன்.

● **“இறைவனுக்கு இணைவைக்கும் பெண்ணை - அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும் வரை நீங்கள் திருமணம் செய்யாதீர்கள்! இறைநம்பிக்கையுடைய அடிமைப் பெண் (அடிமையல்லாத) இணைவைக்கும் பெண்ணை விடச் சிறந்தவள். அவள் உங்களைக் கவர்ந்தாலும் சரியே!**

**உங்கள் பெண்களை இணைவைக்கும் ஆண்களுக்கு - அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளும் வரை - மணமுடித்துக் கொடுக்காதீர்கள். இறைநம்பிக்கையுடைய அடிமையான ஆண் (அடிமையில்லாத) இணைவைக்கக் கூடிய ஆணைவிடச் சிறந்தவன். அவன் உங்களைக் கவர்ந்தாலும் சரியே!**

**(இணை வைக்கும்) அவர்கள் நரகத்தின் பால் உங்களை அழைக்கின்றனர். அல்லாஹ்வோ தனது உத்தரவின் மூலம் மன்னிப்பின்பாலும் சொர்க்கத்தின் பாலும் அழைக்கிறான். அல்லாஹ் தனது வசனங்களை மக்கள் படிப்பினை பெறுவதற்காக தெளிவுபடுத்துகிறான்“. (அல்குர்ஆன் 2:221)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

இறைவனுக்கு இணைவைத்தல் என்றால் இறைவன் அல்லாதவற்றை இறைவனாக பாவித்து வணங்கும் செயலைக் குறிக்கும். இச்செயல் மனித மனங்களில் உண்மை இறைவனைப் பற்றிய மரியாதையை இல்லாமல் ஆக்கிவிடுவதால் பாவங்கள் அதிகரிக்கக் காரணமாகிறது. இது இறைவனால்

மன்னிக்கப்படாத பாவமும் ஆகும்.)

● **“விபச்சாரன் விபச்சாரியையோ அல்லது இணை வைத்து வணங்குபவளையோ அன்றி வேறு எந்த பெண்ணையும் திருமணம் செய்யமாட்டான், விபச்சாரி விபச்சாரனையோ அல்லது இணைவைத்து வணங்குபவனையோ அன்றி (வேறு எவரையும்) திருமணம் செய்ய மாட்டாள். இது இறை நம்பிக்கையாளர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது.“ (அல்குர்ஆன் 24:3)**

● நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

.”நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள்.

1. அவளது செல்வத்திற்காக 2. அவளது குடும்பத்திற்காக 3. அவளது அழகிற்காக 4. அவளது மார்க்கத்திற்காக

மார்க்கம் உடைய பெண்ணை மணந்து வெற்றியடைந்து கொள்.“

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) (நூல்: புகாரி 5090)

(மார்க்கம் என்றால் இறைவனின் கட்டளைகளைப் பேணி வாழும் பண்பைக் குறிக்கும்.)

இந்த உலக வாழ்க்கையோடு எல்லாம் முடிந்து விடுகிறது என்ற எண்ணம்தான் எப்படியாவது இந்த உலகத்தை அனுபவித்து விடத் தூண்டுகிறது. சிந்தனைக்குத் திரை போடுகிறது. இந்த உலக வாழ்க்கை ஒரு நாள் முடிவுக்கு வரும். ஒரு கட்டத்தில் இந்த உலகம் அழியும். அழிந்த பின் அனைவரும் இறைவன் முன்பாக நிறுத்தப்படுவோம். அவரவர் செய்த நன்மை தீமைகளின் அடிப்படையில் சொர்க்கமோ நரகமோ பெறுவார்கள் என்பதை யார் உறுதியுடன் நம்புகிறார்களோ அவர்கள் மட்டுமே இந்த இனக்கவர்ச்சியை வெல்ல முடியும்.

இந்த நம்பிக்கையையூட்டி நமது சந்ததிகளை வளர்ப்பதால் மட்டுமே இன்று மக்கள் அனுபவித்துவரும் விபரீதங்களில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும்.

● ‘மனிதன் யாரை நேசிக்கிறானோ அவனுடன் தான் மறுமையில் இருப்பான்’ என்பது நபிமொழி. எனவே தன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் இறைவழிகட்டுதலை ஏற்று செயல்பட்டால் இவ்வுலகில் இல்லறத்தில் ஏற்படும் குழப்பங்களில் இருந்து பாதுகாப்பும் பெறலாம் மறுமையில் மோட்சத்தையும் அடையலாம்.

# வாசகர் எண்ணம்

● இன்றைய காலச்சூழலில் மனிதன் எப்படி வாழனும், எப்படியெல்லாம் வாழக்கூடாது, என்கிற இறைவனின் சித்தாந்த்தை எளிய தமிழில். இயல்பான நடையில் எதார்த்தமான தொனியில். மக்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டுள்ளது திருக்குர்ஆன் நற்செய்தி மலர். காலத்தின் அவசியம் கருதி, இதை தமிழ்அறிந்த ஒவ்வொரு மாற்று சமூக தோழர் மற்றும் தோழிகளிடம் கண்டிப்பாக போய்ச்சேர்க்க வேண்டியது இதன் வாசகர்களின் பொறுப்பாகும். இறைவன் நற்கூலி வழங்குவானாக.

**- வி.எம்.என். ஷரீப், தும்கூர் 2**

● மார்ச்சு இதழில் “எதனைக் கண்டான் மதங்களைப் படைத்தான்” தனித்துவமான பார்வை கொண்ட தலையங்கள். ‘வெறுங்கையோடு கல்லறைக்கு’ - பாவ உலகை நிலைநிறுத்த முயற்சிப்போரை மனந்திருப்பும் படைப்பு. விழிப்புணர்விற்கான விளக்கு. எறும்புகள் உலகம் செய்தி வியப்பில் ஆழ்த்தியது. அன்றே சொன்ன குர்ஆன்! நன்றி நன்றி.

**- தஞ்சை என்.ஜே கந்தமாறன், சென்னை 89**

<u>அமைதியை நோக்கிய பயணம்</u>

# பயங்கரவாதப் பட்டம்!

உங்களுக்குத் தெரியுமா?

● உலகத்தின் செல்வ வளங்களின் சரிபாதி வெறும் 62 கோடீஸ்வரர்களால் கையகப்படுத்தப் பட்டுள்ளது என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? இன்று நாம் வாழும் உலகின் 10 சதவீத மக்கள் உலக வளங்களின் 87.7 சதவீத வளங்களை அநியாயமாகக் கையகப்படுத்தி உள்ளதால் உலகின் 666 கோடி மக்கள் எஞ்சியுள்ள 12.3 சதவீத வளங்களைத் தங்களுக்கிடையே பங்கீடு செய்யவேண்டிய அவலத்திற்கு உள்ளாகியுள்ளனர். (Report by the Swiss bank Credit Suisse-). இந்த செல்வக் குவிப்பு ஏதோ தற்செயலாக நிகழ்ந்த ஒன்று என்று நீங்கள் தவறாகக் கணக்கிட்டு விடாதீர்கள். இது பெரும் திட்டமிட்டு நடத்தப்படும் அப்பட்டமான கொள்ளை!



● கோடிக்கணக்கான மக்கள் உணவு, நீர், வீடு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வறுமையில் வாடுவதற்கும் உண்ண உணவின்றி அன்றாடம் செத்து மடிவதற்கும் மூல காரணம் இந்தக் கொடியோர்களின் சுயநல வேட்கையே!

● சிறு நாடுகள் தங்கள் கைவசம் செல்வ வளங்கள் பல இருந்தும் இடைவிடாமல் போர்களுக்கு உள்ளாக்கப் படுவதற்கும் அப்பாவிகள் ஈவிரக்கமின்றி கொல்லப் படுவதற்கும் மூல காரணம் இக்கொடியோர்கள் தங்கள் வருமானங்களையும் ஆதிக்கத்தையும் அதிகரிப்பதற்காக மேற்கொள்ளும் வஞ்சகத் திட்டங்களே!

இக்கொடியோர்களின் பிடியில் இருந்து உலகை விடுவிக்கப் போராடும் ஒரே மக்கள் சக்தியாக இஸ்லாம் உருவெடுத்து வருவதால்தான் இன்று அது கடுமையான விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாகிறது என்பதை ஆராய்வோர் உணரலாம்.

## இக்கொடியோர்கள் யார்?

காலனி ஆதிக்கத்தைத் தொடர்ந்து இன்று உலகத்தின் பொருளாதாரத்தை தங்கள் வஞ்சகத் திட்டங்களின் மூலம் கையகப்படுத்தி உலகநாடுகளை தங்கள் கைப்பாவை அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் மூலம் ஆண்டுவரும் இவர்கள் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 13 அல்லது 17 குடும்பத்தின் வம்சாவளியினரே என்று சொல்லப்படுகிறது. தங்கள் சூழ்ச்சிகரமான திட்டங்களுக்கு அமேரிக்காவை இவர்கள் தங்கள் ராணுவக் கரமாக பயன்படுத்துகிறார்கள்.

உலகநாடுகள் அனைத்தின் மேலும் ஆதிக்கம் செலுத்திவரும் இந்த இரகசிய சமுதாயத்தவர்கள் தங்கள் ஆயுத விற்பனையும் வருமானமும் ஆதிக்கமும் தடைபெறக் கூடாது என்பதற்காக ஒருபுறம் இராணுவ அடக்குமுறைகளையும் மறுபுறம் தங்கள் கைவசம் உள்ள பத்திரிகை, டிவி, ரேடியோ போன்ற ஊடகங்களையும் தந்திரமான முறையில் கையாள்கிறார்கள். மக்களை மூளைச்சலவை செய்து தங்கள் அராஜகங்களை நியாயப்படுத்துகிறார்கள். தங்களை சமாதானப் பிரியர்களாகவும் இவர்களின் எதிரிகளை பயங்கர வாதிகளாகவும் சித்தரிக்கிறார்கள்.

இவர்கள் நடத்திவரும் உலகக் கொள்ளைகளில் இருந்தும் அநியாயங்களில்

· இருந்தும் தங்கள் நாடுகளைக் காப்பாற்ற முனையும் விடுதலைப் போராட்ட வீரர்களை பயங்கரவாதிகளாகவும் இவர்களுக்கு எதிராக நிற்கும் மதங்களையும் கொள்கைகளையும் பயங்கரமானவையாகவும் பிற்போக்கானவை அல்லது காட்டுமிராண்டித்தனமாவை என்றும் சித்தரிக்கிறார்கள்.

அவ்வாறுதான் உலக மக்களை தொடர்ந்து மூளைச்சலவை செய்து தங்கள் காரியங்களை சாதித்து வருகிறார்கள் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

சொல்வதற்குப் பல உதாரணங்கள் இருந்தாலும் மிகச் சுருக்கமாக ஒரு சிலவற்றை மட்டும் கவனியுங்கள்....

## பயங்கரவாதம் என்பது என்ன?

கத்தி முனையில் அல்லது துப்பாக்கி முனையில் அப்பாவியை அல்லது அப்பாவிகளை மிரட்டி தனது காரியங்களை அநியாயமாக சாதித்துக் கொள்வது போன்ற நடவடிக்கையே பயங்கரவாதம் என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் இந்த விலைபோன ஊடகங்கள் மக்களை எவ்வாறு மூளைசலவை செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள்:

- ஆங்கிலேயர்கள் சுமார் 300 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக தங்கள் வெள்ளை இனம் குடியேறுவதற்காக அமேரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா கண்டங்களில் அங்கு பூர்வகுடி மக்களை கொடூரமாக கூட்டம் கூட்டமாக இன அழிப்பு நடத்திய வன்கொடுமை இவர்களுக்கு பயங்கரவாதமாகப் படவில்லை!
- வளங்கள் நிறைந்த நாடுகளுக்குள் வியாபாரிகளாக நுழைந்து அந்த நாட்டு அப்பாவிகளை ஆயுத முனையில் மிரட்டிக் கீழடக்கி அவற்றைத் தங்களின் காலனிகளாக்கி நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செய்தவர்களின் செயல்கள் இவர்களைப் பொறுத்தவரை பயங்கரவாதமே அல்ல! என்ன ஆச்சரியம் பாருங்கள்!
- கைப்பற்றிய நாடுகளை பிற்காலத்தில் நிர்பந்தங்களுக்கு உள்ளாகி விட்டுச்செல்லும்போது பல தந்திரங்களைப் பிரயோகித்து தங்கள் வியாபார நிறுவனங்களை நிறுவி அந்நாடுகளின் வளங்களை தொடர்ந்து கொள்ளையடித்து வரும் செயலும்,
- காலனிகளில் இருந்து விடுவித்த நாடுகளில் தங்களின் கைப்பாவை அரசர்களை அரியணையில் ஏற்றி அவர்களின் மூலமாக மறைமுகமாக ஆண்டுவருவதும் தங்களின் ஆயுத விற்பனை தொடர்வதற்காக அண்டைநாடுகளோடு போர்மூட்ட வைப்பதும் அப்பாவிகளை அநியாயமாக கொன்றொழிப்பதும்,

.... இவை எதுவுமே இவர்களின் பயங்கரவாதப்பட்டியலில் வருவதில்லை!

- ஹிரோஷிமா - நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு வீசி கோடிக்கணக்கான மக்களை அழிக்கவும் உடல் ஊனமுற்றவர்களாகவும் ஆக்கவும் செய்தது. அந்தக் கதிர்வீச்சின் பாதிப்பு இன்று பிறக்கும் தலைமுறைகள் வரைத் தொடர்கிறது. இதை மிஞ்சும் பயங்கரவாதத்தை உலகம் கண்டிருக்கிறதா?

## பயங்கரவாதத்தை மதத்தோடு இணைத்துப் பேசுதல்

- மேற்கூறிய கொடுமையாளர்களும்
- லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்த ஹிட்லரும்,
- போர் என்ற பெயரில் அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் இஸ்ரேலும்...

என இவர்கள் யாரும் செய்த கொடூரங்களை அவர்களின் மதத்தோடு இணைத்து இந்த ஊடகங்கள் பேசுவதில்லை என்பதை கவனியுங்கள்.

ஆனால் தங்கள் சொந்த நாட்டை ஆக்கிரமித்து மக்களைக் கொன்று குவிக்கும் அமெரிக்காவுக்கு எதிராகப் போராடும் ஆப்கானிய, ஈராக்கிய மக்களையும் இஸ்ரேலுக்கு எதிராகப் போராடும் பாலஸ்தீன மக்களையும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கூறிவருவதைக் காண்கிறீர்கள்.

இது போக இன்று CIA மற்றும் MOSSAD கூட்டுமுயற்சியில் இவர்களின் கைக்கூலிகளைக் கொண்டு ISIS என்ற என்ற தீவிரவாத அமைப்பை உருவாக்கி பல கோரமான நிகழ்வுகளை நடத்தி அவற்றை இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமியர்களின் மீதும் உலகளாவிய வெறுப்பை உண்டாக்க அரும்பாடு படுகின்றனர்.

'தீவிரவாதம் என்ற விஷயம் நாடு, இனம், மதம், மொழி என எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது" என மனித உரிமை ஆர்வலர்கள் பலமுறை சொன்னாலும் அது ஏன் பெரும்பாலானவர்கள் காதுகளில் விழுவதில்லை? இவ்வாறு உலகம் முழுக்க திரும்ப திரும்பக் கட்டவிழ்க்கப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான பொய்களுக்கு என்ன காரணம்?

அப்படியொரு வெறுப்பு ஏன் உலகெங்கும் உண்டாக்கப்படுகிறது?

அதற்கு முக்கியமான காரணம் உள்ளது.... அது என்ன?

இஸ்லாம் என்பது வெகுவேகமாக வளர்ந்துவரும் மக்கள் சக்தி! அது அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிரானது என்பதேயாகும்!

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை *9886001357* என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு *4* மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-  ● ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357   email: amkasim@yahoo.com**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173